# முதலாளித்வ கைக்கூலிகளை முறியடிப்போம!

## அ. இ. தேசிய தொழிற்சங்க எதிர்ப்பு நாள் கொண்டாடுக!

## பொறுத்தது போதும், இனிப் பொறுக்கமாட்டோம்!

## தொழிலாளர் கூட்டத்தில் ஜெயப்பிரகாஷ் முழக்கம்

**நாட்டின் தர்போதைய நிலைமையில் குழப்பம் விளைவிக்க நாம் விரும்பவில்லை. ஆனால் அதற்காக கால வரையறையின்றி காத்திருப்பது என்பது முடியாது.**

**ராஜஸ்தான் ரயில்வே தொழிலாளர் பிரச்சினையில் ரயில்வே மந்திரியாலயம், சமஸ்தான மந்திரியாலயம் இவற்றுக்கிடையே நடைபெறும் பேச்சுவார்த்தை முறியுமானால், ராஜஸ்தான் ரயில்வேயில் வேலை நிறுத்தம் ஏற்படக் கூடும்.**

**சர்க்கார் ஏற்படுத்திய இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசை எதிர்த்து, பிப்ரவரி 28-ம் தேதியை ஆட்சேப தினமாக அனுஷ்டிக்குமாறு ரயில்வே தொழிலாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.**

அண்மையில் லக்ஷ்மணபுரியில் ரயில்வே தொழிலாளர் கூட்டம் ஒன்றில் பேசிய போது, சமதர்மக் கட்சித் தலைவர் தோழர் ஜயப்பிரகாஷ் நாராயண் மேற்கண்டவாறு பேசியுள்ளார். ராஜஸ்தான் ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக முன்னறிவிப்பு விடுத்திருந்தனர். அது சம்பந்தமாகப் பேச நேர்ந்த போது தான், அவர் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

தோழர் ஜயப்பிரகாஷ் சமதர்மக் கட்சியின் தலைவர். தொழிலாளர் நலங்கருதுபவர் எனினும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கண்டிக்கத் தவறுகிறவர். காங்கிரஸ் ஆட்சியாளரின் கடைக்கண் நோக்கு பெற்றவர். இத்தகைய பண்பினரான தோழர் ஜயப்பிரகாஷ் நாராயணர் அவர்களே ஆட்சியாளரை நோக்கி கேட்கிறார்.

“நாட்டின் நிலையற்றத்து குழப்பம் விளைவிக்க நாங்கள் விரும்பவில்லை. ஆனால் கால வரையறையின்றி காத்திருக்க முடியாது” என்ற தோழர் ஜயப்பிரகாஷின் இந்த உரையை வெற்றுரையெனக் கருதிவிட முடியாது. எச்சரிக்கை விடுப்பதற்குப் பதிலாக அறிவுரை தந்திருக்கிறார் அவர். “குழப்பம் விளைவிக்க எங்களுக்குத் தெரியும், ஆனால் நாங்கள் அதனை விரும்பவில்லை; அவசியம் நேர்ந்தால் அதனையும் செய்து காண்பிப்போம்” எனும் பொருள்படவே அங்ஙனம் பேசியுள்ளார். அரசியலார் தோழர் ஜயப்பிரகாஷின் இந்த எச்சரிக்கையை ஏற்று ரயில்வேத் தொழிலாளர் பிரச்னையை விரைவில் தீர்க்க முற்படவேண்டும். இல்லையேல் தென்றல் புயலாக மாறும்!

தோழர் ஜயப்பிரகாஷ் மேலும் பேசுகையில் தொழிலாளர் விஷயத்தில் அரசியலார் செய்யும் சித்து விளையாட்டுகளுக்கும் சரியான சூடு கொடுத்திருக்கிறார். அகில இந்திய தேசிய தொழிற் சங்கம் என்ற பெயரில் முதலாளித்துவத்துக்கு வால்பிடிக்கும் ஒரு ஸ்தாபனத்தை நிறுவி, அதற்கு ஆதரவு தந்து வருகின்றனர் ஆட்சியாளர். தொழில் உலகம் நலம் பெற வேண்டுமானால், தொழிலாளரிடையே ஒற்றுமை வளர வேண்டுமானால் இத்தகைய போலி தொழிற் சங்கம் ஒழிக்கப்படவேண்டும். இக்கருத்தை உள்ளடக்கியே தோழர் ஜயப்பிரகாஷ் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரசுக்கு எதிர்ப்பு தினம் கொண்டாடும்படி தொழிலாளருக்குக் கட்டளையிடுகிறார்.

தோழர் ஜெயப்பிரகாஷின் இந்தக் கட்டளையை மேற்கொண்டு பிப். 28-ல் நாடெங்கும் அ. இ. தே. தொழிற் சங்க எதிர்ப்பு தினம் கொண்டாட வேண்டியது ஒவ்வொரு தொழிலாளியின் இன்றியமையாக் கடனாகும்.

பொதுவாக தொழிற் சங்கங்கள் எனப்படுபவை தொழிலாளர் நலனுக்காக, தொழிலாளர்களாலேயே நிறுவப்படுபவைதான் இயற்கை ஆனால் எந்த முதலாளித்வக்கைத் தகர்த்தெறிய தொழிலாளர் பாடுபடவேண்டுமோ, அந்த முதலாளித்வ கும்பலே தொழிலாளர் ஸ்தாபனத்தை ஏற்படுத்தியுள்ள புதுமையை இந்நாட்டில்தான் காண்கிறோம் எனவே தொழிலாளர் பிரச்னைகள் தீரவேண்டுவது எத்துணை அவசியமோ அவசியமானதோ அதேபோன்று இந்த முதலாளித்வ ஆதரவு பெற்ற அகில இந்திய தேசிய தொழிற் சங்கம் ஒழிக்கப்பட வேண்டுவதும் அவசியமாகும். இத்தகைய போலி தொழிற் சங்கங்கள் ஒழிந்தாலன்றி, தொழிலாளர் வாழ முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு, தோழர் ஜயப்பிரகாஷின் அறிவுரையையும் ஏற்று பிப்ரவரி 28-ந் தேதி அகில இந்திய தேசியத் தொழிற் சங்க எதிர்ப்புத் தினமாகக் கொண்டாட இந்தியத் தொழிலாளர் அனைவரும் திரண்டு முன்வர்களாக.

வாழ்க தொழில் உலகம்!


Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (6—2—50) வெளியூர் (7—2—50) [ இதழ் 161


## குணக்குன்று மறைவு

பொது நலம் பேணும் பெரியாரும், வைத்திய வள்ளலும், பெரியார் ராமசாமியவர்களின் தமையனருமாகிய அன்புத் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமியவர்கள் 4-2—50 சனி மாலை 4-30 மணிக்கு 73-வது வயதில் ஈரோட்டில் தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். 1887-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாள் தோன்றி பொது நலத் தொண்டில் பெரும் பங்கு கொண்டு திகழ்ந்து, இல்லோரின் துணையாகவும் சாந்தத்தின் உறைவிடமாகவும் விளங்கிய பெரியார் கிருஷ்ணசாமியவர்கள் கடந்த சில நாட்களாகவே உடல் நலிவுற்றிருந்தார்.

சனிக்கிழமையன்று மாலை இத்திடுக்கிடும் சம்பவம் நேர்ந்ததும் சென்னை யுள்ளிட்ட பல ஊர்களுக்கும் தந்திச் செய்திகள் அனுப்பப்பட்டன. பெரியார் ஈ. வெ. ரா, நண்பர் சம்பத் முதலியோர் உடனிருந்து குடும்பத் துக்கத்தில் கலந்து ஆழ்ந்தனர்.

இரவு 8 மணிக்குத் தந்தி கிடைக்கப்பெற்றதும் சென்னையிலிருந்து தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. ஆர். ராமசாமி, டி. எம். பார்த்தசாரதி, கே. கோவிந்தசாமி ஆகியோர் இரவே புறப்பட்டு, ஞாயிறு காலை ஈரோடு சென்றடைந்தனர். திருச்சியிலிருந்து தோழர்கள் சங்கரன், வானமாமலை, பராங்குசம், சாப்பு ஆகியோரும் சேலத்திலிருந்து தோழர்கள் ரேசு அருணாசலம், சித்தையன் ஆகியோரும் வந்து கலந்து கொண்டனர். செய்தியறிந்த ஈரோடு வட்டாரத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் வந்து திரண்டு, தங்களது இறுதி மரியாதையினைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஞாயிறு பகல் 12 மணிக்கு பிரேத ஊர்வலம் புறப்பட்டு, வேங்கடப்ப நாயக்கர் சத்திரப் பகுதியில் தனியே அமைக்கப் பெற்ற கல்லறையில் சவ அடக்கம் நடைபெற்றது. தந்தை வேங்கடப்பர் கல்லறையினையடுத்துத் தனயர் கிருஷ்ணசாமியவர் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது.

ஈரோடு பெருநகர முழுவதும் துக்கமும் சோகமும் குடிகொண்டிருக்கிறது.

## இந்தோ-சீனா பெற்ற சுதந்தரம்

### பிரிட்டன் அதிருப்தி

லண்டன் ........ திருப்பிய பின் இந்தோ-சீனா விஷயமாக அவர் பிரெஞ்சு ......... மந்திரி பிராவிஸாட்டின் சந்தித்துப் பேசியபோது தன் கருத்துக்களைத் தெரிவித்தார் ஆலோசிப்பார் என்று தெரிகிறது.

பிரெஞ்சு வட்டாரங்கள், பிரிட்டன் பாவ்டேயின் ஆட்சியை அங்கீகரித்துவிடும் என்று சம்பினாலும் பாவ்டேயின் ஆட்சியின் அரசியல், பொருளாதார அந்நியோன்யம் விஷயமாக பிரிட்டன் அதிருப்தி கொண்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

........, ........, ........ மூன்று இந்தோசீனா நாடுகளுக்கு முழு சுதந்தரம் அளிக்காமலிருந்தால் பிரிட்டனுக்கு முழு திருப்தி ஏற்பட்டிருக்கும் என்கிற ........ வெளிவந்திருப்பதாக லண்டன் ........ கூறுகிறார்.

இந்தோனேஷ்ய ஐக்கிய நாடுகள் பெற்ற அரசியல் ........ ஒரு ........ காட்டியுள்ள அந்த ........ இந்தோசீனாவுக்கு அளிக்கப்படவேண்டும் என்று பிரிட்டன் விரும்புகிறது என்று இவர் கூறுகிறார்.

மாஞ்செஸ்டர் கார்டியன், ........ பாவ்டே சர்க்காருக்கு கொடுத்துள்ள அதிகாரம் போதாது என்றும், ........ அவர் பொதுமக்கள் ஆதரவை பெற்றாலொழிய அவர் சர்க்காரை அங்கீகரிப்பதில் ........ என்றும் எழுதியிருக்கிறது.

## இராக்கில் மந்திரிசபை நெருக்கடி

இராக் மந்திரிசபை ராஜினாமா செய்வதாக வந்த செய்தி இன்னும் உறுதி செய்யப்படவில்லை. ஆனால் இச்சர்க்கார் சென்ற ........ பல் ஏற்பட்ட மூறாற்கொண்டே இந்த ........ என்று ........ எதிர்பார்க்கப்பட்டது. ........ முன்னாள் ........ மந்திரிசபையில் மந்திரிகளுக்குள்ளே கருத்து வேற்றுமை இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மெஜாரிட்டி கட்சித் தலைவரான ........ புதிய மந்திரி சபையை அமைக்கலாம் என்று கருதப்படுகிறது.

## இஸ்ரேலுடன் நேரடிப் பேச்சுவார்த்தைக்கு அரபு மறுப்பு

### ஐ. நா. சமரசக் கமிஷனின் முயற்சி தோற்றது

ஐ. நா. பாலஸ்தீன சமரசக் கமிஷன் அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுடன் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தும்படி தூண்ட முயற்சித்தது தோல்வியில் முடிந்தது என்று இங்குள்ள அரபு பிரதிநிதிகள் கூறுகின்றனர். கமிஷன் முன்புகூட இஸ்ரேலுடன் நேரடியான சமரசப் பேச்சு நடத்துவதென்பது முடியாது என்பதை லெபனான் சார்பில்தான் அறிவித்து விட்டதாக பெர்ன ........ யிலுள்ள லெபனான் அரசுப் பிரதிநிதி ஜெர்மீல் பிகாவி கூறினர்.

கமிஷனுடன் தாங்கள் ஒத்துழைப்பதற்காக இங்கு இருக்கிறோமே ஒழிய, வேறு யாருடனும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக அல்ல என்று எகிப்தின் பிரதிநிதி அப்துல் மோனிம் ........ கூறுகிறார்.

# மாலை மணி

சென்னை 6—2—50 திங்கட்கிழமை


# அவலம்! அவலம்!!

அன்பின் உருவம்; அருங் குணப் பெரியார்; என்பும் பிறர்க்கே ஈயும் இயல்புடை இணையில் பண்பினர்; பழுத்த மேனியர்; விழுமிய கொள்கையர்; ஒழுக்கசீலர்; உயர்குணக் குன்று; அறிவே உயிர்ப்பாய், வடுவிலே நோக்காய் அறநெறி பிறழா தகைமந்த நற்புகழினர்; 'நாட்டவர் நலமே நான் நாடும் நலம், அந்நலம்நாடுற அனைத்தும் துறப்பேன்' எனத் தம்பியைத், தனயனைத், தன் நல்வாழ்வை நாட்டுக் கீந்த நெறியில் செம்மல்; வைத்தியவள்ளல்; வண்டமிழார்வலர்; ஈரோடு தந்த ஈகையிற் சிறந்தோர் ஈ. வெ. கிருஷ்ணசாமியவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத் துயரில் மீளா துழல்கிறோம். கடந்த சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்து, வெளி வரத் துப் போக்கின்றி வீட்டிலேயே தங்க நேர்ந்த ஈ. வெ. கி. அவர்கள் இத்துணை விரைவில் சாக் காட்டைத் தழுவுவாரென்று யாருமே நினைத்திலர். எழுபத் திரண்டாவதுவயதைத்தாண்டியும் இளமைக் கவர்ச்சியும், ஏக்கமுத்தும், பீடு நடையுங் குறு குறுத்தப் பார்வையும் கொண்டு திகழ்ந்த ஈ. வெ. கி. அவர்கள் எமக்கெல்லாம் ஆறுதலும் தேறுதலும் என்றென்றும் நல்கிவந்த எய்ப்பில் வைப்பாகவும், இன்மொழிக் கருவூலமாகவும், தேர்ந்த தாய்ச சரக்காகவும் திகழ்ந்து வந்தார். அந்தோ மறைந்தார்! உடலுறுப்புக்களினும் உள்ள அரிப்பெ அப்புண்ணியரைஇத் துணை சடுதியில் இயற்கை இட்டுககொள்ளபொறுப்பாயிருந்த தென்பதை யுணருங்கால் — கூறத்தெரியுங்கால் — அந்தோ, விம்மிவிம்மி பெரு மூச்செறிவதுதவிர, வேறொன்றும் செய்வதறியா கையறு நிலையெய்து கிறோம்.

தென்னாட்டுப் பொது வாழ்வோடு இரண்டறக் கலந்ததாகும் பெரியார் கிருஷ்ணசாமியவர்களின் பெருங்குடும்பம். ஈரோடு நகர சபை இத் தனிப் பெருங் குடும்பத்தின் தன்னலமற்ற சேவையை நீண்ட காலமாகத் தொடர்ந்து பெற்று வருகிறது. பொதுத் தொண்டையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட குடும்பத்தின் சீரிய முயற்சிக ளனைத்துக்கும் பெரியார் ஈ. வெ. கி. அவர்களின் அன்பாதரவும் பெருமித ஒத்துழைப்பும், உள்ளன்போடு நல்கிவந்த ஊக்கமும், உற்சாகமும் திராவிடம் என்றுமே மறக்க இயலாதவையாகும்.

தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கும் பெரியார் கிருஷ்ணசாமியவர்களாற் றியதொண்டு பெரிது! பெரிது!! 1937-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் இப் பெரியார் ஆற்றிய தொண்டு அளவிடற்பாலதன்று. பகுத்தறிவு, புரட்சி, குடியரசு, விடுதலை இதழ்களின் வெளியீட்டாளராகவும் ஆசிரியராகவுமிருந்து வரும்பங்கு கொண்டவர். சுயமரியாதை-நீதிக்கட்சி-திராவிட இயக்க நடப்புகளிலும், காரியங்களிலும் இடக்கத்தின் பிறப்பிடமாக மிளிர்ந்த ஈ. வெ. கி. அவர்கள் ஆட்சியாளரின் அடக்குமுறை பாணத்துக்கும் ஆளாகமலில்லை. குடியரசு, விடுதலை இதழ்களில் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்த காலை, இருமுறை சிறைத்தண்டனை அனுபவிக்க நேர்ந்தது நம் பெரியாரென்பதைத் திராவிடம் என்றுமே மறவாது.

தமிழ் நாட்டில் சித்த மருத்துவம் என்றால், வைத்திய வள்ளல் ஈ. வெ. கி. அவர்களே அனைவர் மனக்கண் முன்பும் வந்து நிற்பார். சித்த மருத்துவத் துறைக்கு, அதன் வளர்ச்சிக்கு, முன்னேற்றத் துக்கு பெரியார் கிருஷ்ணசாமி தன் வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்து, அத் துறையில் இடையறாத் தொண்டாற்றி வந்திருக்கிறார். மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றிருக்கும் பற்பல சித்த மருத்துவ மாநாடுகளுக்குத் தலைமை தாங்கி, தனது சான்றாண்மையுரையை வழங்கியிருக்கிறார். கருணையின் பேருருவாக விளங்கி, தனது மருத்துவ அறிவையுந்திறனையும் குடும்ப அறநிதிக்கு சிறியல்களையும் நோய்வாய்ப்பட்ட பல்லாயிரக் கணக்கான மக்களின் நலத்துக் குப்பயன்படுத்திய இப் பெருந்தகையை 'வைத்திய வள்ளல்' என வாயாரப்பாராட்டி வாழ்த்தினர் பயன் தெரிந்தோர். அந்தோ, இல்லோர் ஒக்கல் துணைவர்—இன்முகம் கரவா ஏந்தல் மறைந்தார்! இதற்கு ஆறுதலெப்படியென அலமருகிறோம்!

ஆறாத் துயரந்தானெனினும், ஆறுதல் அவசியமென்ற கடமையுணர்ச்சி நம்மை நாமே தேற்றிக்கொள்ள வற்புறுத்துவதை யொட்டி, நாமும்தேறுவதோடு மறைந்த பெரியாரின் குடும்பத்தாருக்கு நம்முளமார்ந்த அநுதாபத்தையும் ஆறுதல் மொழியினையும் தெரிவித்துக்கொள்வதோடு தந்தையை இழந்து வாடும் தலைமகனார் சம்பத் அவர்கள், துயரத்தில் தொடர்ந்து தோய்ந்து விடாது, விரைவில் மனந்தேறி தந்தையார் விட்டுச்சென்ற பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

---

## சென்னை மாவட்ட தி.மு. கழக உறுப்பினர்கள் அவசரக் கூட்டம்

நாளது 7—2—50 செவ்வாய்க்கிழமை, மாலை 5-30 மணிக்கு, சென்னை, மண்ணடி மாலைமணி, அலுவலகத்தில் மேற்படி அவசரக் கூட்டம் நடைபெறும். அதுபோது நமது ஈரோடு வைத்திய வள்ளலும், பெரியார் ஈ. வெ. ரா அவர்களின் அண்ணனுமாகிய ஈ. வெ. கிருஷ்ணசாமி, அவர்கள் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கவேண்டியிருப்பதால், மாவட்டக் கழக, கிளைக்கழக, உறுப்பினர்கள் அனைவரும், தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

கே. கோவிந்தசாமி
செயலாளர்.

## லண்டனில் ஒரு திருநீலகண்டர்!

லண்டன், பிப். 4—

மனைவியினுல் அலட்சியம் செய்யப்பட்டு குளிக்கும் அறையைத் தன் படுக்கை அறையாக இரண்டு ஆண்டு காலம் உபயோகித்த கணவன் தன் மனைவியுடன் விவாகரத்து கோரி மனுச் செய்துகொண்டான். தன்னை மனைவி கொடுமைப் படுத்தினாள் என்பது அவனது குற்றச்சாட்டு. மனைவி கணவன்தன்னை அலட்சியம் செய்துவிட்டதாகக் குறைகூறி திருமண ரத்து மனுச் செய்து கொண்டாள். கணவன் மனு நிராகரிக்கப்பட்டு மனைவியின் மனு அனுமதிக்கப்பட்டு; தீர்ப்பளிக்கப்பட்டது. இப்பொழுது அந்தத் தம்பதிகளுக்கிடையே திருமண ரத்து ஏற்பட்டுவிட்டது.

## இந்தோ-சீனு 'போலந்து' ஆகிறதா?

லண்டன், பிப். 5—

ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்திருப்பதும் சிங்காய் பிரதிநிதிகள் பேச்சு நடத்த மாஸ்கோ வந்திருப்பதும், ஆசியாவில் ரஷ்ய கைவரிசையைக் காட்டும் கட்டத்தில் ஒரு புது நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது என்று இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது. கம்யூனிஸ்டு வசமாகிவிட்டதின் அடுத்த இந்தோ-சீனு முக்கியத்துவத்தை பெற ஆரம்பித்து அடுத்த இலக்காகக் கருதப்படுகிறது என்று கூறப்படுகிறது.

---

லண்டன், பிப். 2—

தற்கால பிரிட்டிஷ்காரர்கள் பிரஷ்களை உபயோகிக்காமல் சீப்பினுல் தலை வாருவதால்தான், மயிர் உதிர்ந்து போகிறது என்று லண்டன் 'ஸலூன்'காரர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

## அறிவுக் கதிர்!

மக்களை, மக்களாலேயே தேர்ந்தெடுத்தனுப்பப்பட்டவர்கள் ஆளுவதும், ஆள்பவர்க்கே ஆட்சி என இல்லாமல், நாட்டவரின் கூட்டு உழைப்போடும், நடைபெறுவதும் தீட்டிய திட்டங்கள் ஏட்டளவோடு இல்லாமல் நாட்டிலே செய்து நன்மை காண்பதும், எவ்வித சிறு உரிமையும் மறுக்கப்படாததுமே 'குடியரசு' என்பதாகும்.

— ஆப்ரகாம் லிங்கன்

---

# அரிசி உபயோகத்தைச் சிக்கனப்படுத்தத் திட்டம்

## சென்னை சர்க்கார் சுற்றறிக்கை

சென்னை, பிப் 3—

வருங்காலத்தில் அரிசி உபயோகிப்பதை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு சிக்கனப் படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்த சென்னை சர்க்கார் கீழ்க்கண்ட சுற்றறிக்கையை மாகாணத்திலுள்ள எல்லா மாவட்ட கலெக்டர்களுக்கும், மாவட்ட ரேஷன் அதிகாரிகளுக்கும், சென்னை ரேஷனின் அதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கின்றனர்.

### காப்பி ஓட்டல்கள்

இந்த ஓட்டல்களுக்கு சப்ளை செய்யும் 100-க்கு 25 பங்கிலிருந்து 12½% குறைக்கப்படவேண்டும். மிகுதியான 12 பங்கை லெமோலினு ரவையுடன் ஏதாவது இதர தானியமோ வகையறாக்களோ கொடுக்கப்படவேண்டும்.

### புது ஓட்டல்கள் திறப்பது

மாவட்ட ரேஷனின் அதிகாரிகளுக்கும், சென்னை ரேஷனின் அதிகாரிகளுக்கும் புதிய ஓட்டல் ஒரு இடத்தில் அத்தியாவசியமாக வேண்டுமென்று ஆலோசித்து திறப்பதற்கு இதுவரை அனுமதி அளித்து வந்தனர்.

இனி சாப்பாடு ஓட்டல்களோ, அல்லது கொய்யவோ அரிசியோ தேவை வேண்டுமென்கின்ற ஓட்டல்களோ திறப்பதற்கு அவர்கள் அனுமதி அளிக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

இத்துடன் அரிசி கொய்யைத் தவிர இதர தானிய வகையறாக்கள் (கோதுமை லெமோலினு ரவை) உபயோகிக்கக்கூடிய ஓட்டல்கள் திறப்பதற்கு தாராளமாக மனதில் முன்வந்தால் அவர்களுக்கு ஒரு தடையின்றி அனுமதி தாராளமாக அளித்தல் வேண்டும். ஏனெனில் பொது மக்களிடையே தானிய வகையறாக்கள் உபயோகிப்பதின் அவர் நாளடைவில் அதிகரிக்கும் என்று சர்க்கார் கூறியுள்ளார்.

### பிற்பகல் உணவு விடுதிகள்

பள்ளி மாணவர்களுக்குப் பிற்பகல் உணவு அளிக்கும் விடுதிகள் இப்பொழுது சாதாரணமாக ஒரு மாணவனுக்கு 4 அவுன்ஸ் ஒரு நாள் பெறுகின்றது. இனி இவ்விடுதிகளில் அரிசி இரண்டு அவுன்ஸ் தான் ஒரு மாணவனுக்கு ஒரு நாள் கொடுக்கப்படவேண்டும். எஞ்சிய இரண்டு அவுன்சிற்கு, லெமோலினு ரவையோ அல்லது ஏதாவது இதர தானிய வகையறாக்களோ விநியோகிக்கப்படவேண்டும்.

### தொழிற்சாலைகளிலுள்ள "காண்டீன்கள்"

தொழிலாளிகளுக்குப் பிற்பகல் உணவு அளிக்கும் இந்த காண்டீன்கள் தனிப்பட்டவை. ஆனால் ஒரு கம்பெனியில் அதன் சிப்பந்திகளுக்கு உடன் அளிக்கும் 'கான்டீன்களுக்கு' மாவட்ட ரேஷனின் அதிகாரியோ, அல்லது சென்னை ரேஷனின் அதிகாரியோ இனி அரிசி சப்ளை கொடுப்பதை உடனே நிறுத்தப்படவேண்டும்.

1946, மே மாதம் 1-ந் தேதிக்கு முன்பு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளிலுள்ள காண்டீன்களில் இப்பொழுது இரண்டு அவுன்ஸ் அரிசி வழங்கப்படுகிறது. இனி ஒரு அவுன்ஸ் அரிசியுடன், ஒரு அவுன்ஸ் சோயும் அளிக்கப்படவேண்டும். எஞ்சிய இரண்டு அவுன்சை ஒரு தொழிலாளிக்கு லெமோலினு ரவையுடன், ரொட்டியும், வேறு எந்த தானிய வகையறாக்களும் அளிக்கப்படவேண்டும்.

### கார்டு வைத்திருப்பவர்களுக்கு

கிராமாந்தரங்களிலுள்ளவர்களுக்கு விநியோகம் செய்ய சகலரும் செய்யும் இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் சர்க்கார் எல்லா கலெக்டர்களுக்கும் உத்தரவிட்டிருக்கின்றனர். இச்சோய் எல்லா கார்டு வைத்திருப்பவர்களுக்கு எளிதில் பெறுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும். ஏனெனில் இதன் விலை அரிசியின் விலையைக் காட்டிலும் சற்று குறைந்திருப்பதால் என்று சர்க்கார் கூறியுள்ளார்.

ஏழை மக்கள் பெரும்பாலாக எங்கு அதிகமாக இருக்கின்றனரோ, அவ்விடங்களில் செய் . அந்த ரேஷன் கடைகளில் அதிகமாகக் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சியை கலெக்டர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

---

## மதுரை மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள், மதுரை மாவட்டச்சுற்றுப்பிரயாணத்தின்போது நிகழ்ச்சியில் கண்டவைகளைத் தவிர, வேறு எந்தவித ஏற்பாடுகளிலும் கண்டிப்பாய்க் கலந்து கொள்ளமாட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். முத்து
துணைச்செயலாளர்
ம. மா. தி. மு. கழகம்

## பஞ்சாபுக்குப் புதுத் தலைநகர்

நியூயார்க், பிப். 4—

நாடு பிரிவினை செய்யப்பட்டபோது பஞ்சாபின் தலைநகராக இருந்த பாகிஸ்தான் பகுதியில் சேர்ந்துவிட்டதால் இப்பொழுது பஞ்சாபுக்கு சகல வசதிகளும் கொண்ட தலைநகர் எதுவும் இல்லாமலிருக்கிறது. இதற்காக ஒரு புது தலைநகர் ஏற்படுத்த திட்டம்போட பிரபல நியூயார்க் கட்டிட வல்லுநரான ஆல்பர்ட் மேயர் என்பவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த பிளான் போடும் வேலையை அவர் துவக்கிவிட்டார்.

இந்தியாவிலிருந்து சமீபத்தில் திரும்பி வந்த தோழர் அல்பர்ட் மேயர் இப்புது தலைநகர் பற்றி நிருபர்களிடம் கூறியதாவது:—

இந்திய சர்க்காரிடமிருந்து கடன் உதவிபெற்ற பஞ்சாப் சர்க்கார் இதற்கான தொகையைச் செலவிடவிருக்கின்றனர். இந்நகருக்கும் இன்னும் பெயர் எதுவும் கொடுக்கப்படவில்லை.

இந்நகர் டில்லி, சிம்லா பாதையில் டில்லிக்கு 140 மைல் தூரத்தில் நிர்மாணமாகும். இந்த இடத்திற்கு மூன்று மைல் தூரத்தில் சண்டிகர் என்ற நகரம் இருக்கிறது.

ஒரு புது நகரையே எழுப்பத் திட்டம் போடுவது என்பது ஒரு பெரிய காரியம்தான். வாஷிங்டன் ஒக்ரிட்ஜ் கான்பெரா ஆகிய தலைநகர்கள் திட்டம்போட்டு நிர்மாணிக்கப்பட்டவைகளே.

இப்புது நகர் நிர்மாண வேலை இன்னும் 6 மாதத்தில் ஆரம்பித்து 5 ஆண்டு காலத்தில் முடிவடையும்.

தோழர் மேயர் மீண்டும் கோடை காலத்தில் இந்தியா வந்து தன் வேலைகளைத் துவக்குவார்.

